# ஈஷா சுகாதார விழிப்புணர்வுத் திட்டம் துவக்கம்

கோவை, ஜன. 2: ஈஷா அறக்கட்டளை சார்பில் சுகாதார விழிப்புணர்வுத் திட்டம் துவங்கப்பட்டு உள்ளது.

ஈஷா யோக மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இத் திட்டம் துவக்கிவைக்கப்பட்டது.

கிராமப் புத்துணர்வு இயக்கத்தின் மூலம் கிராமங்களில் மருத்துவ முகாம்களை நடத்தி வந்த ஈஷா அறக்கட்டளை, தற்போது நோய் வரும் முன் காக்கும் வகையில் சுகாதார விழிப்புணர்வு திட்டத்தை துவக்கி உள்ளது.

நோய்த் தடுப்பு, தொற்று நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், சிகிச்சை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தல் ஆகிய 3 நிலைகளில் திட்டம் செயல்படுத்தப்படும். கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டத்தை ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் துவக்கி வைத்துப் பேசினார்.

'இத் திட்டம் சிறிய அளவில் துவங்கப்பட்டு உள்ளது. சுகாதார விழிப்புணர்வைப் பரப்புவதற்கு மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சுகாதாரம், நோய்த் தடுப்பு, சிகிச்சை குறித்த விழிப்புணர்வை தங்களது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஒவ்வொரு தனிநபரும் ஏற்படுத்த வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டார்.



கோவையை அடுத்த வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள ஈஷா யோக மையத்தில் சுகாதார விழிப்புணர்வுத் திட்டத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகிறார் சத்குரு ஜக்கி வாசுதேவ்.

நடமாடும் இலவச மருத்துவ மையங்கள் செயல்பட்டு வரும் 1080 கிராமங்களில் முதல் கட்டமாக சுகாதார விழிப்புணர்வுத் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது. பிற கிராமங்களுக்கும் இத் திட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும், தொற்றுநோயைத் தடுக்கும் முயற்சியாக தூய்மை மற்றும் சுகாதாரமான கிராமங்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

கிராம மக்களிடம் அதிக அளவில் காணப்படும் ரத்த சோகை, சத்து பற்றாக்குறை, சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

நோய் இருப்பவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படும்.

அரசு நிறுவனங்கள், மருத்துவமனைகளுடன் இணைந்து எச்ஐவி, காசநோய், கண் மற்றும் பல் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது.

சுகாதார விழிப்புணர்வுத் திட்டத்தின் துவக்கமாக செம்மேடு கிராமத்தில் சர்க்கரை நோய் விழிப்புணர்வு பிரசாரம் நடத்தப்பட்டது.